1990 ஆகஸ்டு 22]

களில் இயங்கி வருகின்ற காவல் நிலையங்களுக்கெல்லாம் விரைவில் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் அதனுடைய எண்ணிக்கை பற்றிய குறிப்புகளையும் போலீஸ் மானியக் கோரிக்கையில் விவாதிக்கப் பட்டபோது நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைத்தல்

*3575—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் சப்-மாஜிஸ் டிரேட் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்க வேண்டுமென்று பன்னெடுங்காலமாகக் கோரிக்கை விடுத்து, அது பரிசீலிக்கப்பட்டு, முடிகின்ற தருவாயில் இருக்கின்றபோது, தற்போது அமைச்சரவர்கள் உண்டு என்று சொல்வாரெனக் கருதி னேன். ஆனால், இல்லை என்று சொல்லி விட்டார்கள். தயவு செய்து, பேராவூரணியில், நம்முடைய தமிழக முதல்வரவர்கள் அறிவித்த 'இன்ஸ்பெக்டர் ஆபீஸ்' கூட சமீபத்தில் துவக்கப்பட் டது—பேராவூரணி மிகப்பெரிய லட்சக்கணக்கான மக்கள்தொகை கொண்ட ஊராகும். அப்படிப்பட்ட அந்த ஊரில் சப்-மாஜிஸ்டி டிரேட் கோர்ட் இல்லாதது பொது மக்களுக்கும், காவலர்களுக்கும் அலுவலர்களுக்கும் மிகப்பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, மீண்டும் மறு பரிசீலனை செய்து, சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று துவக்க, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் தற்போது இயங்கி வருகிற மாவட்ட முன்சீப் கோர்ட் மற்றும் குற்றவியல்

நீதிமன்றம் எண் 2 ஆகியவற்றின் அதிகார எல்லைக்குள் உட்பட்டு பேராவூரணி இருக்கிறது. பேராவூரணிக்கும், இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கும் இடையிலுள்ள தூரம் 27 கிலோ மீட்டர். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை வேண்டுமானால், உயர் நீதிமன்ற நீதிபதிக்குத் தெரிவித்து, அவருடைய கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணிக்கும், பட்டுகோட்டைக்கும் 27 கிலோ மீட்டர் தூரம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 10,15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஊர்களுக்கெல்லாம் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்கப்பட்டுள்ளது. இந்த பட்டுக்கோட்டையில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவங்கி இருப்பதனால், பேராவூரணியிலிருந்து வருவது மிகப்பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆகவே தயவுசெய்து, அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வதாகச் சொல்கிறார்கள்—அதற்கு ஏதாவது காலக்கெடு உண்டா? தயவுசெய்து மீண்டும் மறுபரிசீலனை செய்து பேராவூரணியில் ஒரு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்க ஆவனசெய்யும்படி அன்புடன் வேண்டுகிறேன். அதை அறிவிப்பாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய அறிக்கையைப் பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பட்டுக்கோட்டையில் ஏறத்தாழ ரூ. 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட செலவிலே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன...

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சப்-மாஜிஸ்டிரேட்டும், டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பும் இரண்டும் 'இன்டெக்ரேஷன்' ஆகி, அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இல்லாத இடங்களில், 'டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-கம்-சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்' என்று செங்கோட்டையில் இருப்பதைப் போல, செயற்படுத்த அரசு அனுமதி அளிக்குமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல 'டிஸ்ட்ரிக்ட்-கம்-சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட்' ஆக நடைபெற வேண்டுமென்ற கருத்து அரசுக்கு உண்டு. இதுபற்றி உயர்நீதிமன்றத்தின் கருத்தைப் பெற்றபின் அந்தக் கருத்தின் மீது நடவடிக்கை எடுக்கலாம்.